[5th July 1962

Anicut across the Agniar

*131 *Q*.—SRI M. KALYANASUNDARAM: } Will the Hon.
SRI P. MURUGAIYAN:

the Minister for Works be pleased to state the present stage of the proposal to construct an anicut across the Agniar in Alangudi taluk, Pudukkottai Division, Tiruchirappalli district?

THE HON. SRI V. RAMAIAH: The remarks of the Board of Revenue on the revenue, financial, Grow More Food, etc., aspects of the scheme, have been received and the scheme is under examination.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: இந்தத் திட்டமானது கனம் அமைச்சர் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புடைய ஒரு பகுதியைச் சேர்ந்தது. ' 1957 தேர்தல் சமயத்தில், அமைச்சர் அவர்கள் அந்தப் பக்கத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது, 'அதை நிறைவேற்றித் தந்து விடுகிறேன்' என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் ஆலோசனையில் இருக்கவேண்டிய காரணம் என்ன?

கனம் திரு. வி. ராமைய்யா: எனக்கு நெருங்கிய தொடர்பு இருக்கக்கூடிய பகுதியைச் சேர்ந்த ஒரு திட்டம் என்ற காரணத்திற்காக, எதையும் பரிசீலனை செய்யாமல் அணையைக் கட்டிவிட முடியாது. அதற்கு வேண்டிய பூர்வாங்க வேலைகள் அத்தனையையும் தக்க முறையில் நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்தவர்கள் செய்து முடித்து, இப்பொழுது ஒரு திட்டத்தை உருவாக்கி அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்த கட்டத்திலே அந்தத் திட்டம் இருக்கிறது.

திரு. சா. கணேசன்: அந்த அணைக்கட்டின் மூலமாக மொத்தம் எத்துணை ஏக்கராக்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று அனுமானிக்கப்பட்டிருக்கிறது, அல்லது கவனிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வி. ராமைய்யா: அந்தத் திட்டத்தினுடைய முக்கிய அம்சம் என்னவென்றால், புது நிலப் பரப்பு ஒன்றும் பாசனத்திற்கு வராது. இருக்கக்கூடிய கண்மாய்களுக்குத் தண்ணீர் கொடுத்து, அங்கே உள்ள சாகுபடியைப் பாதுகாப்போடு செய்யக்கூடிய சூழ்நிலையைத்தான் இந்தத் திட்டம் ஏற்படுத்த உத்தேசிக்கிறது.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது? இந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றுவது சாத்தியம் என்ற வகையில் அதிகாரிகளுடைய அறிக்கை இருக்கிறதா? அல்லது, அதற்கு எதிராக இருக்கிறதா?

கனம் திரு. வி. ராமைய்யா: அதிகாரிகளுடைய அறிக்கை வந்திருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுத்தவுடனே அதற்குவேண்டிய பதிலைச் சொல்கிறேன். திட்டம் ஏறத்தாழ பதினான்கு அல்லது பதினைந்து லட்ச ரூபாய் செலவில் இருக்கும் என்று சொல்லலாம்.